Registered as a News Paper in Ceylon
P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

தனிப்பிரதி: சதம் 10.

[புத் - சுசு] யாழ்ப்பாணம்:- ஜய வருஷ ஆவணி மீ ௪ உ வெள்ளிக்கிழமை (20 AUGU. 1954) [இல - கக]

## திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணி

### நிறைவுறச் செய்து நீடு வாழுக

திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபையார் சென்ற (12-8-54) வியாழக்கிழமை மாலை கூடிய திருவாகசபைக்கூட்டத்தில் தீர்மானித்தபடி 19—8—54 வியாழக்கிழமை திருப்பணி வேலை ஆரம்பிப்பதற்கு வேண்டிய ஆயத்தங்களுடன் அங்கத்தவர் சிலரும் ஸ்ரீ செல்லக்கண்ணு ஸ்தபதியாரும் அவரது உதவியாட்களும் திருக்கேதீச்சரம் சென்றிருக்கிறார்கள். திருவிநாயகர் கோவில் முதலான ஆறு சுற்றுக் கோவில் திருப்பணியைச் சபையார் இப்போது ஆரம்பித்துப் பூர்த்தி பண்ணுவதாகவும், பழைய புதிய கதிரேசன் கோவில் தர்மகர்த்தாக்களாகிய நகரத்தார் (செட்டியார் சமூகம்) சுவாமிகோவில் திருப்பணியைத் தாங்கள் செய்வதாக ஏற்றிருப்பதாகவும் அறிய வருகிறது. ஏனைய நடராசா கோவில முதலான வைகளைச் சைவாபிமானச் செல்வர்கள் ஏற்று இனிது பூர்த்தியாக்கும் வண்ணம் கௌரிநாயகி அம்பாள் சமேத திருக்கேதீச்சரப் பெருமான் திருவருள்பாலிப்பாராக.

அரசியல் அரங்கு

## இரத்தச் சிவப்பிலே இலக்குப் பொறிந்தது

### மாநகர ஆட்சி விதி மாயமாய் மாறினது

அங்கு மிங்கும் தத்தும் அங்கத்தவர் யாரின் உதவிகொண்டாவது மாநகரத் தலைவராக வரத் தலையால் நடந்தார். வலது புறமும் அவரை வரவேற்கவில்லை, இடதுபுறமும் ஏன் என்றும் கேட்கவில்லை. இதற்கிடையிற் கட்சி மோகங் கொண்டாரின் காட்சி வேடிக்கையாய் மாறியது.

விருந்துக்கழைத்துவிருப்பத்தை முடிக்கத் துணிந்த வலதுசாரிகள் திரு. ரி உருத்திராவை உருக் குலைக்க வழிதேடினர்; உருவமும் நிலைதடுமாறி விட்டதுதான் என்று பெரும் ஆரவாரம். மின்னல் வேகச் சூழ்ச்சிகள் தொடர்ந்தன. அங்குமிங்குமாயலைந்தவர் இடதுசாரிக்கட்சித்தலைவர் கலாநிதி என். எம். பெரேராவுக்குத் தமது வாக்கைக் கொடுக்க முன் வந்தார், சூழ்ச்சிகள் வீழ்ந்தன. இரத்தச் சிவப்பிலே இலக்குப் பொறிந்தது.

விருந்துகள் வேட்டைகள் எல்லாம் வீணாய்ப் போயின. கலாநிதி பெரேராவைத் தொடர்ந்து சென்றது பதவி. பதவி வேட்டைக்காரர் வெட்கிப் பதுங்கினர்.

திரு. இராமநாயக. அது தான் அந்த அங்கும் இங்கும் எங்குமாய் அலைந்து இற்றில் இரத்தச் சிவப்புக்கு அதிட்டம் தேடியவரின் பெயர். முன்னர் ஒரு திரு. கிறேரோ என்னவோ இயற்றினரே. அன்னாரின் பின் இவர் தோற்றினர்.

## பிரியாவிடைக் கூட்டம்

எழுதுமட்டுவாள் அரசினர்பாடசாலையில் தலைமை ஆசிரியராகப் பத்துவருடங்கள் கடமையாற்றிய திரு. வே. கா. கந்தையா அவர்களுக்கு அவ்வூர் மக்களும் மாணவரும் 14-8-54 சனிக்கிழமை ஒரு பிரியாவிடையளித்தனர். இவர் 42 வருடகாலம் இலங்கையின் பல பாகங்களிலும் கடமையாற்றியிருக்கின்றார்.

ஆனல் முன்னையவர் முயற்சியில் வெற்றி பெற்றார். இவர் ஏமாந்து போய்த் தோற்றார்.

அது ஒரு பக்கம். இந்த இடதுசாரி அங்கத்தவர்கள் இரண்டாய்ப் பிரிந்தார்கள். உருசிய நாட்டு உருவ வழிபாட்டினர் ஒருகை. இந்நாட்டுப் புரட்சியினர் இன்னொருகை. ஆனல் இரு பக்கத்தினரும் கருடனும் பாம்பும்போல! ஒருவரைத் தெரிவு செய்ய மற்றைய குழுவுக்கு மனம் வராதுபோக இருவரும் போட்டியிட்டுத் திருவுளச் சீட்டிட்டுச் சிந்தையற்றுகின்றனர். உருசிய இனக் கட்சி திருவுளச் சீட்டில் அநுகூலமாயிருந்தால் ஐக்கியதேசியக் கட்சி விருந்து கொடுத்தும் வெறுங்கையாகாது வெற்றியோடு வெளிவந்திருக்கும்.

மாநகர ஆட்சியில் சிவப்பும் பச்சையும், இடதும் வலதும் என்றால் என்ன ஆச்சரியம்........! ஆட்சிக் கொள்கையை மாற்றியமைக்கும் மன்றம் என்றாலும் காரியமில்லை. நகர ஆட்சி நடைமுறை நடத்துவோர் சிவப்பானல் என்ன உவப்பானலென்ன........!

## திருமுருகாற்றுப்படை — இலக்கிய நயம்

——————o—o——————

### உள்ளத்திலெழுகின்ற உணர்ச்சி ஊற்று

(முற்றொடர் — 3)

திரு. சி. முருகவேள்

கிரம்பிய இன்பத்தையோ அல்லது துக்கத்தையோ பெற்ற ஒருவன் தான் பெற்றதை மற்றவர்களுக்குக் கூறிப் பகிர்ந்து கொள்ள விழைகின்றான். இது மனித இயல்பாகும். இம்மனித இயல்பு கவிதை நிகழ்ச்சிக்கு அடிப்படையான காரணமாகும்

நக்கீரர் முருகனைக் காதலித்துப் பரவிப் பணிந்து அவனருள் பெற்றுக் கரையிலா இன்பத்தில மலர்ந்தார். அவ்வின்பானுபவத்தைப் புலப்படுத்தல் அவருக்குத் தப்பமுடியாத நிகழ்ச்சியாகும். புலமை கைவந்தவராதலின் கவிதை வடிவமாகவே தன் அனுபவத்தைப் புலப்படுத்த முன்வந்தனர். ஆற்றுப்படை அமைதியைக் கைக்கொண்டதனல் தான் முருகன் அருள் பெற்றுத் திரும்புவதாகவும் வழியில் ஒருவனை எதிர்வதாகவும் கற்பனை செய்துகொள்ள வேண்டிய நிலைமை அவருக்கு ஏற்பட்டது.

எதிர்ப்பட்டவனுக்கும் முருகனுக்கும் உள்ள தொடர்பு கவிஞனுக்குத் தெரியாது- எதிர்ப்பட்டவன் முருகனைப் பற்றிக் கேள்விப்படாதவனகவும் இருக்கலாம். அவனுக்கு முருகாற்றைக் கூறமுன்னர் முருகனை அறிமுகப்படுத்த வேண்டும். அவனுக்கு முருகனிடத்தில் ஆராத அன்பு ஏற்படச் செய்தல் வேண்டும். இவை யாவும் சில அகவலடிகளுக்குள் நடந்து தீரவேண்டும். மிகவும் கடினமான வேலை. இக்கடினமான வேலையை நக்கீரர் எவ்வாறு செய்து முடிக்கிறார் என்பதைப் பார்க்கலாம்.

தூரத்திலே நுண்மையாகக் காண முடியாத அளவு தூரத்திலேமுருகனை முழுமையாகக் காட்டுகிறார் எதிர்ப்பட்டவருக்குக் கவிஞர். (எங்களுக்குத்தான் காட்டுகின்றார்) "உலகமெல்லாம் உவந்து வாழும்படி உலகத்தை வலமாகச் சுற்றி வருகின்ற சூரியன் கடலிலே தோன்றுகின்ற காட்சியைநீ கண்டிருக்கின்றாய் அல்லவா? அச் சூரியனைப்போல நீக்கமற இமைத்துக்கொண் டிருக்கிறான் முருகன்" என்று எடுத்த எடுப்பிலே முருகனைக் காட்டுகின்றார் கவிஞர்

உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு
ஓவற விமைக்குஞ் சேண்விளங் [கவிரொளி

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

திருப்போரூர்ச் சந்நிதி

## முறைத்திரட்டு

அன்பெலாம் நின்பாலே ஆக்கி அடியேனும்
இன்பெலாம் உண்டிங் கிருப்பாறச்—கொன்புனைவேல்
கையாதென் போரூரிற் காங்கேயா வீடுதவும்
ஐயா! நீ கண்பார்த் தருள். (6)

எதுபிழை செய்தாலும் ஏழையேனுக் கிரங்கித்
தீது புரியாத தெய்வமே — நீதி
தழைக்கின்ற போரூர்த் தனிமுதலே! நாயேன்
பிழைக்கின்ற வாறுநீ பேசு. (7)

மெய்யடியார் போலவிக நடிப்பேன் மெய்யடியார்
செய்யடிமைத் தொண்டேதுஞ் செய்திலேன் —பொய்யடியேன்
உன்னருட் கமலபதத்துள் நிறையப் போரூரா
எந்நாட் கிடைக்கு மெனக்கு? (8)

நோயுற் றிடாமல் நொந்துமனம் வாடாமல்
பாயிற் கிடவாமல் பாவியேன் — காயத்தை
ஓர்நொடிக்குள் நீக்கியெனை ஒண்போரூர் ஐயா! நின்
சீரடிக்கீழ் வைப்பாய் தெரிந்து (9)

## நல்லூர் வடக்கு திவ்வியசீவனசங்கம்

— —

மேற்படி சங்கத்தின் நான்காவது திருப்பூர்ணிமாதினம் நல்லூர் வடக்கு விநாயக வாசமண்டபத்தில் இம் மாதம் 31ந் தேதி (15-8-54) சனிக்கிழமை மாலை நடைபெற்றது. அவ்வமயம் தேவாரம், பூசை பஜனை, யோகாசனம், உபந்நியாசம் முதலியனவும் நடைபெற்றன. பின்னர் செல்வன் திரு. க. சவுந்தரலிங்கம், திரு. கே. சித்திவிநாயகம் என்போரால் முறையே சொற்பொழிவும் இசைவிருந்தும் அளிக்கப்பட்டன.

திருச்சிற்றம்பலம்
வாழ்கஅந்தணர்வானவர் ஆனினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாம்அரனாமமே
சூழ்கவையகமுந்துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

யாழ். ஜய வரு ஆவணி மீ
ச உ வெள்ளிக்கிழமை

## நிறவெறியா......?

நாற்பதுகோடி மக்கள் உள்ள நாட்டை பூவுலகில் மாபெரும் அரசபீடமாகிய இங்கிலாந்து நூற்றைம்பதாண்டுகள் ஆட்சிசெய்து ஆதிக்கஞ் செலுத்தியபின் அம்மக்களுக்கே முழுமனச் சம்மதத்தோடு அளித்துவிட்டு நல்லெண்ணம் என்றும் நிலவும் பொருட்டு மெல்லவிலகிய வரலாற்றை அறிந்தும் போர்த்துக்கேயர் பாரதத்திலே மூலை முடக்கில் முன்னாள் வணிகஞ் செய்து வஞ்சகமாகக் கைப்பற்றிய கோவா முதலிய மூன்று இடங்களைக் கைவிடமாட்டோமென்று இருபதாம் நூற்றாண்டில் இந்நாளில் வீரத்தத் துடிப்போடு வாய் இரம் கூறுவதை அரசியற் குழந்தைகள் கூட எள்ளி நகையாடாது விடுவார்களா?

விடுதலைநாள் விழாவிற் பேசிய நேருப்பெரியாரின் அரசியல் அறிவுரையைப் போர்த்துக்கேயர் மட்டுமன்று வல்லரசுநாட்டமைச்சர்களும் ஆய்ந்து அறிவார்களேயானால் மாநிலத்தில் ஏன் அமைதி நிலவமுடியாது? வெள்ளையர்கள் வியாபார வேட்டையாடி பூவுலகில் ஆங்காங்கு புகுந்து பல்லாண்டுகளாக அரசு நடத்திய ஆற்றலினால் ஒரு நிறவெறி ஏற்பட்டுவிட்டதென்றாலும், நால்வகைப் போர்முறையில் மேலாக விளங்கிய வல்லரசுகளாம் இங்கிலாந்து பிராஞ்சு முதலிய நாடுகள் மண்ணுளும் மயக்கம் தெளிந்து புததியறிந்தவர் போலப் பெருந் தன்மையாக நடந்துவரும்வேளையில் போர்த்துக்கேயர் போர்க்கோலங்கொண்டிருப்பதை நினைக்கும்பொழுது இவர்கள் குன்றுமுட்டிய குரீப் போல இடர்ப்படுவதற்காகத்தான் படபடக்கின்றார்கள் என்றுநாம் விளங்க வேண்டியிருக்கின்றது.

முடியாட்சியில் முழுவுலகிலும் முதன்மை பெற்ற இங்கிலாந்தை அடிபணியச் செய்ய ஆத்ம ஆற்றல் படைத்த பாரதநாடாபோர்த்துக்கேயரின் போலிப்பேச்சில் அச்சம் அடையப் போகின்றது? நீதி நெறி வழுவாத வழியிலே கோவாவை இந்தியர் விடுதலை செய்விப்பார்கள் என்பதில் ஒரு ஐயமுமில்லை

ஆனால் இலங்கைச் செய்தித்தாள்களிற் சில போர்த்துக்கேயர் மாபெரும் வெற்றியடைந்துவிட்டார்கள் என்றும் இந்தியரின் விடுதலை இயக்கம் தோற்றுப்போனதென்றும் ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் விபரங்களைப் பரப்புவதைப்பார்த்தால் இலங்கையிற் குடியாட்சியின் போர்வையில் நின்று முடியாட்சிக் குதவி கொடுப்போர் பலர் உளர் என்றும் அன்னார் பாரதநாட்டின் நன்மையை விரும்பாதவர்கள் என்றும் சொல்லாமலே முடிவு கூறக்கூடியதாயிருக்கின்றது. இலங்கைவாழ் இந்தியர்களுக்கு மட்டுமன்றிப் பாரதநாட்டு மக்களுக்குமே இம்மனப்பான்மையுடையோர் என்றும் தீங்கிழைக்கும் எண்ணமாயிருக்கின்றார்கள் என்பது வெள்ளிடைமலைபோல் வெளியாகின்றது.

எனினும் அறநெறி எவ்வாற்றானும் வெற்றிபெறும் என்பதை இந்தியர் விடுதலை இயக்கம் இதுவரை நன்கு புலப்படுத்தியது போல இன்னமும் தெளிவாய் அறிவுறுத்தும்என்று நாம் சொலலவேண்டியதில்லை. வணிகத்தால் மாநில ஆதிக்கம் பெறத் துணிந்து நிற்கும் வல்லரசுகள் ஒன்றுகூடினும் ஆத்ம ஆற்றலிற் சிறந்த பாரதநாட்டை அடிபணியச் செய்ய முடியாது.

* * *

## பாராளுமன்றத்து அங்கத்தவர்களுக்கு...!

தமிழுஞ் சிங்களமும் ஈழத்து அரசவரிசை மொழிகள் என்ற மக்கள் தீர்ப்பை (அரசாங்க சபை State Council - முடிவை) இந்நாட்டு அரசியல் அமைப்பில் அழுத்தம் திருத்தமாகச் சேர்த்துவிட வேண்டுமென்று நாம் பன்முறை ஆங்கிலதமிழ் இந்துசாதன இதழ்களில் இடித்து இடித்து எடுத்துக்காட்டியிருக்கின்றோம். அதற்கிணங்க யாழ்ப்பாண மாநகரசபையில திரு. து. ச. துரைராசா அவர்கள் பெருமுயற்சியினால் ஒரு முடிபு செய்யப்பெற்றதை நாம பாராட்டுகின்றோம்.

தமிழுஞ் - சிங்களமும் அரச அலுவல் மொழிகளாய் பலவாண்டுகளுக்கு முன் அரசாங்கசபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டனவென்றதை ஒருவரும் மறந்துவிட முடியாது இப்பொழுதுள்ள மாநகரசபை வேண்டுகோள் அந்த முடிபைச் செயல்முறையில் ஆக்கிவைக்கவேண்டுமென்பதும் அரசியல் அமைப்பில் அதைச் சேர்த்துவிட வேண்டும் என்பதுமே.

## பழம்பெரும்பண்பில் விளைந்த 'பாரத இரத்தினம்'

(இந்திய விடுதலைநாளிற் பட்டம்அளிப்பு)



பாரத மக்களின் ஆராத அன்பு பெற்ற குடியரசுத் தலைவர் - கலாநிதி, பாபு இராசேந்திர பிரசாத்

## திருநாமம் ஓதச் சித்தம் தெளியும்

திருநாமமும் அதைத் தாங்கியருளும் கடவுளும் ஒன்றென நாம் உள்ளுதல் வேண்டும. பெயர் பரம்பொருளின் தன்மையைக் காட்டும். இடையீடின்றித் திருநாமத்தை ஓதுவோர் இதற்கென்று பிறிதோரிடத்தில் இருக்கவேண்டியதில்லை!

பாலைப்பற்றி ஒருவர் சிந்திக்கும்போது பாலின் குணங்களெல்லாம் அவருடைய மனக்கண்ணின் முன் வருகின்றன. அதுபோலவே கடவுளுடைய திருநாமத்தை ஓதும்போது அவருடைய குணங்களெல்லாம் முன்னுக்கு வரவேண்டும். ஒரு வைக்கோற் குவியலை ஒரு நெருப்புப் பொறி எரித்தழிப்பது போல ஒருவருடைய மனத்திற் படிந்திருக்கும் அழுக்குகள் எல்லாவற்றையும் நீக்கிப் பரிசுத்தஞ் செய்யுந் தன்மையது திருநாமம். இதை நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் அனுபவத்திற் செய்துபாருங்கள். இனிப்பிற் சுவையை அதை உண்டுபார்த்தாலன்றி அறியமுடியாது.

—சுவாமி. இராமதாசர்.

## புகையிலை விசாரணைச் சபை

புகையிலை விசாரணைச் சபையார் 18-8-54-ல் தங்கள் விசாரணையைத் தொடங்குகின்றனர், கொழும்பில்1—9—54தொடக்கமும் அதற்குமுன் பிறவிடங்களிலும் விசாரணை நடக்கும்.

பாராளுமன்றத்தில் தமிழ் பேசும் அங்கத்தவர்களாயிருப்போர் இவ்வித வேண்டுகோளை இன்னமும் ஏன் கொண்டுவரவில்லை என்று நாம் கேட்கின்றோம்? அரசமொழிகளைப் பற்றி அடிக்கடி ஆரவாரஞ் செய்வதில் ஒருபயனுமில்லை. கண்ணுங் கருத்துமாயிருந்து பாராளுமன்ற முடிபாக அரசியல் அமைப்பில் அரச அலுவல் மொழிகள் தமிழுஞ் சிங்களமும் என்ற உறுப்பைச் சேர்த்துவிட வேண்டுமென்பதே வேண்டப்படுவது.

## அரசியல்வாதியும் அகப்பட்டார்

கைக்கூலி விசாரணைக் குழுவினர் வீசிய வலைக்குள் பாராளுமன்ற அங்கத்தவர் ஒருவரும் அகப்பட்டுக்கொண்டாரென்றும் அவர்மீதும் வழக்குத் தொடரப்படுமென்றும் கூறப்படுகின்றது.

************************

## இறுதிக் கிரியைக்கே இடர்ப்படுத்த பொதுவுடைமையர்

முகத்துவாரப் பகுதியில் இறந்த ஒரு கத்தோலிக்க மதத்தவருக்கு அப்பகுதிக் குருவானவர் மரணக் கிரியைகள் செய்ய மறுத்து விட்டனராம்.

காரணம் அவர் பொதுவுடைமைக் கட்சிச் சார்பாய் கொழும்பு மாநகர சங்கத் தேர்தலில் வாக்களித்ததாகும்.

************************

# திருக்குறள் தேவாரப் பொருளொற்றுமை

## முப்பொருளறிவே நுதலிய பொருளாகும்

[திருக்குறளுக்கும் தேவாரத்துக்குமுள்ள தொடர்பை விளக்குமாறு வித்துவான் திரு. மு. நடராசநேசிகர் "ஞானசம்பந்தம்" ஆடித் திங்கள் இதழில் எழுதிய கட்டுரையின் ஒரு பகுதி ]

தேவர் குறளும் திருநான்
மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்
— கோவை
திருவாசகமும் திருமூலர்
சொல்லும்
ஒருவாசகம் என் றுணர்

என்பது ஔவையார் அருண்மொழி.

திருவள்ளுவ நாயனருடைய திருக்குறளும், சிறப்புப் பொருந்திய நான்கு வேதங்களின் முடிவாகிய உபநிடதங்களும், திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள் என்னும் மூவருடைய தேவாரமாகிய தமிழ் வேதமும, வியாச முனிவருடைய வேதாந்த சூத்திரமும், திருக்கோவையார் திருவாசகங்களும், திருமூல நாயனருடைய திருமந்திரமும் ஒரு பொருளையே குறித்தவாகங்களென்று அறிவாயாக.

திருக்குறள் முதலிய நூல்களெல்லாம் வேறு வேறு வாக்கியங்களாகத் தோன்றினும், பதிஇலக்கணமும், பசுஇலக்கணமும், பந்த இலக்கணமும், முத்தி இலக்கணமும் ஆகிய இவைகளை ஒரு தன்மையாகவே அறிவிக்கும் நூல்களாம்.

தேவர் என்பது திருவள்ளுவரைக் குறிக்கும். திரு என்பது உயர்வையும், வள்ளுவர் என்பதுவண்மையை உடையர் என்பதையும் விளக்கி நிற்கும்.

அது வேதத்தில் இலை மறை காய்கள்போல் பலவிடங்களிலும் மறைந்து வெளிப்படாதிருந்த மெய்ப்பொருள்களையெல்லாம் தொகுத்து உலகத்தாருக்குக் கொடுத்தருள் செய்தவரென்னும் காரணம் பற்றி வந்த பெயராயிற்று. உள், முதனிலை, அர் இறுதிநிலை, உ. சாரியை அம்முதனிலைப் பொருள் ஈகை.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு.

எழுத்துக்களெல்லாம் அகரமாகிய முதலையுடையன. அதுபோல உலகம் ஆதிபகவனாகிய முதலையுடைத்து. அவற்றுள் முயற்சியுள் 'அ' 'ஆ' அங்காப்புடைய (நன்னூல்) மேல் இடம் வகுக்கப்பட்ட முதல் எழுத்துக்களுள், அ ஆ இரண்டும் அண்ணத்தின் தொழிலாகிய அங்காத்தலையுடையனவாய்ப் பிறக்கும்.

"அங்காத்தல் - வாயைத் திறத்தல். எழுத்தெனப்படும்."

"அகாமுதல் னகரவிறுவாய் முப்பஃதென்ப எழுத்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# சிற்றினஞ் சேராது பேரினம் பேணல்

## நல் இயல்பு ஆகும் அறிவு பெற்று நல்ல வண்ணம் வாழ வழி

சிற்றினம் சேராமை என்பது சிறிய இனத்தைச் சேர்ந்து கொள்ளாமை என்பதே. இவ்வுலகிடை வாழும் மாந்தர் தத்தம் வாழ்க்கையிலே ஒவ்வோர் காரணம் நோக்கிப் பிறருடன் சேர்ந்து வாழவேண்டிய சந்தர்ப்பம் உடையவராய் இருக்கின்றார்கள். அவ்வச் சந்தர்ப்பங்களிலே தம்மால் சேர்ந்து கொள்ளப்படுபவர் சிற்றினத்தவரா என்று ஆராய்ந்து பார்த்து அவர் சிற்றினத்தவராயின் அவருடன் சேர்ந்து கொள்ளாதபடி கண்டிப்பாகவே தம்மைக் காக்கக் கடவர். அவ்வாறு என்னையெனின், அச்சிற்றினச் சேர்க்கை அங்ஙனம் சேர்ந்து கொள்வார்க்குத் தீமையை விளைக்கும். இவ்வுண்மையை நாம் அனுபவத்தில் கண்டு கொள்பவராய் இருக்கிறோம்.

திருக்குறள் உரையாசிரியராய பரிமேலழகர் இச்சிற்றினம் சேராமை என்பதை, "அதாவது சிறிய இனத்தைப் பொருந்தாமை, சிறிய இனமாவது நல்லதன்னலனும், தீயதன் தீமையு மிலலென்போரும், விடரும், தூர்த்தரும் நடருமுள்ளிட்ட குழு" என்றும் அது அறிவைத் திரித்து இருமையுங்கெடுக்கும் இயல்பிறறது" என்றும் விளக்குகின்றார்.

இன்றுவரையும் உள்ள கடந்த கால வரலாறுகளிலே சிறிய இனத்தைச் சேர்ந்து கெட்டுப்போன மாந்தர் பலர். சிறிய இனத்தைக் சேர்ந்த அமைச்சரது புத்தி கேட்டுக் கெட்டுப்போன அரசரும் பலர். சிறிய இனத்தைச் சேர்ந்த மனைவியின் சொல்லைக் கேட்டுக் கெட்டுத் தன் குடும்பத்தையுங் கெடுத்துக் கொண்ட கணவரும் பலர். இவைகள் மாத்திரமல்ல சிறிய இனத்தைச் சேர்ந்த பிள்ளைகளுடன் சேர்ந்து கொண்ட காரணத்தால் பாடசாலைகளில் தேர்வு முதலியவற்றில் சித்தியடையாது கெட்டுப்போன பிள்ளைகளும் பலராவர். சேரிடம் அறிந்துசேர், நல்லிணக்கம் அல்லது அல்லற்படுத்தும் என்பன வாய வாக்கியங்களெல்லாம் ஒருவன் சிற்றினத்தைச் சேரக்கூடாது என்பதைக் குறித்து எழுந்த வாக்கியங்கள். ஒருவர்க்கறிவு அவர் சூழலைப பொறுத்து உண்டாகின்றதுஎன்பது மானதசாத்திரத்தில் கண்ட முடிபு. நல்ல சூழலின் அனுபவம் நல்லறிவையும் தீயசூழலின் அனுபவம் தீயவறிவையும் கொடுக்கும் என்பதை அறிஞர் முன்னரே கண்டுரைத்தனர். ஆகையாற்றான் நல்ல சூழல்களிலே பிள்ளைகளை வளர்க்கவேண்டுமென்று சான்றோர் சொல்வதும் என்க.

இனி இவ்வுண்மைகளைத் தெய்வப்புலவர் திருவள்ளுவர் கருத்தின் துணைகொண்டும் அறிவாம்.

"நிலத்தினியல்பா னீர்திரிந்
தற்றாகு மாந்தர்க
கினத்தியல்ப தாகு மறிவு".

என்பது அவர் கூற்று.

இதன்பொருள் — விசும்பின் கண் தன் தூய்மைத் தன்மையுடன் இருந்த நீர் நிலத்தை அடைந்ததும் தனது தன்மை திரிந்து அடையப்பட்ட அந்நிலத்தின் தன்மையைப் பெற்றுக்கொள்ளுதல் போல தூய குணம் செயல்களையுடைய ஒருவனும் தன்னால் சேரப்பட்ட சிற்றினத்தவனது குணம் செயலால் தன்றன்மை திரிந்து அச்சிற்றினத்தவனது பண்பு செயல் உடைய தீயவனாகி விடுகிறான் என்க.

மக்களுக்குப் பொது உணர்வு தம்மனங் காரணமாக உண்டாகும். ஆனால் இவன் இன்னதன்மையன் என்று உலகத்தாரால் சொல்லப்படும் சொல் அவனுக்கு இனம் காரணமாகவே உண்டாகின்றது. அஃதாவது ஒருவனைச் சுட்டி அவன் நல்லவனென்றும் தீயவனென்றும் சொல்லப்படுகின்ற பண்பாடு அவன் சேர்ந்து கொண்ட இனங் காரணமாக அவனுக்குக் கிடைக்கின்றது. அது அவனுக்குச் சொந்த மனத்தான் உண்டாவதன்றென்க. ஆனால் பொதுவகையாக நோக்குவாருக்கு ஒருவர்க்குண்டாகும் அறிவு, அவன்றன் மனத்தில் இருந்து உண்டாகிறதென்று எண்ணக் கூடியதாக இருக்கும். அப்படி அதன் புலப்பாடு இருந்தாலும் ஆண்டும் அதன் மெய்மை நோககியவழி அதற்கு மூலகாரணம் அவன் சேர்ந்துகொண்ட இனம் என்பது துணியப்படும். ஒருவன் இனத்தாற் பெற்றுக் கொண்ட அறிவு அவன் உள்ளத்தில் ஊறிவிடுதலினாலே அவன் ஒரு வினையைச்செய்யும்போது அதற்குரிய அறிவு அவன் மனதில் இருந்து உதயமாயிற்றென்று பிறர் துணியக் கூடியதாய் அவ்வறிவு காட்டி விடுகின்றது. அதற்கு இனமே மூலகாரணம் என்க.

ஒருவன் இனம் தூயனாகவே அதனோடு பயிற்சி வயத்தான் மனம் தூயவனாய் அதன்கண் விசேட உணர்வு புலப்பட்டு அதனாற் சொல்லும் செயலும் தூயனாவான். ஆகையால் ஒருவர்க்கு விசேடவுணர்வு புலப்படுதற்கிடனாய மனத் தூயனாதற்றன்மையும் செய்வினை தூயனாதற்றன்மையுமாகிய இவ்விரண்டும் இனம் தூயனாதற்றன்மை பற்றுக்கோடாக உளவாம்.

மனந் தூயனாதலாவது, விசேடவுணர்வு புலப்படுமாறு அறியாமையி னீங்குதல்; செய்வினை தூயனாதலாவது மொழி, மெய்களாற் செய்யும் நல்வினை யுடையனாதல் என்க. எனவே ஒருவன் மனமும் தூயனாய் இனமும தூயனாய் இருத்தல் வேண்டும் என்றறிக. மனந்தூயராயினர்க்கு மக்கட்பேறு நன்றாகும் என்றும், இனந் தூயராயினர்க்கு நன்றாகா வினையாதும் இல்லை என்றும் அறிக. நல்லினத்தோ டெண்ணிச் செய்யப்படுதலின் எல்லா வினையும் நல்லவாகும் என்றும் கொள்க. மன்னுயிர்க்கு மனத்து நன்மை செல்வத்தைக் கொடுக்கும். இனத்து நன்மை அதனோடு எல்லாப் புகழையும் கொடுக்கும். மனம் நன்றாதல் ஒரு அறமாகும். புகழ் கொடுத்தற்குரிய நல்லோர் தாமே இனமாகலின் அவ்வினம் காரணமாக அந்நல்லினமுடையார்க்கு எல்லாப் புகழும் வந்தடையும் என்க. ஒருவர் முன்னைச் செய்த நல்வினையினாலே மன நன்மையைத் தாமேயுடையராயினுங் கூட இன நன்மையுடையவராய் இருத்தல் வேண்டும். என்னையெனின் அந் நல்லினை யுள்வழியும் மனநலத்தை வளர்த்து வருதலில் இனநன்மை அதற் கேமாப்புடைத்தென்க, மன நலத்தினாலே மேற் சொலலப்பட்ட இம்மை நலன்கள் மாத்திரமல்ல மறுமை இன்பமும் உண்டாகும். அம்மனத்துக்கு அச்சிறப்புத்தானும் இன நன்மையானே வலி

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

# வருங்காலச் சமுதாய முன்னேற்றம்

## கற்ற பெண்களின் கையிலிருப்பது

( எழுதியது: செல்வி S. சிவபாக்கியம் )

பெண்ணென்பது சக்தி, சக்தியென்பது வல்லமை. வல்லமையாற்றான் யாதொருகாரியத்தையும் சாதிக்க இயலும். எங்கள் சற்சமயமாகிய சைவ சமய முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானும் சக்தியின்றேல ஒன்றுஞ் செய்ய இயலாது. இதனாலன்றோ சக்தியாகிய உமா தேவியைத் தமது வாமபாகத்தில் என்றும் வைத்திருக்கின்றார். ஆதலாலிவருக்குச் சக்திசமேதரென்ற திருநாமம் ஏற்படலாயிற்று. இத்தகைய வல்லமையுடைத்தாகிய பெண்கள் தங்கள் வல்லமைகளைத் தகுந்த முறையில் பாவிக்கவேண்டும். பெண்கள் தங்கள் வல்லமைகளைத் தக்க இடங்களில் பாவிக்கத் தயங்குவது சரியல்ல! எத்தனையோ பெண்கள் தக்ககல்வியறிவு இடம், பொருள், ஏவல்களிருந்தும் தங்கள் கடமை இன்னதென ஓர்ந்து நடக்கச் செயல்புரியத் தொண்டாற்றத் தயங்குகின்றனர் வாளா வீணே காலங்கழிக்கின்றனர். ஒரு நாட்டின் அல்லது தேசத்தின் முன்னேற்றம் அந்த நாட்டுப் பெண்களிற்றான் தங்கியிருக்கின்றது. அன்றியும் ஒவ்வொரு இல்லிற்கும் பெண்களே முதன்மை பெற்றவர்கள். ஆட்சிபுரிபவர். இதனாலன்றோ பெண்கட்கு இல்லாள் என்ற பெயர் ஏற்பட்டது. இத்தகைய இல்லாள் கல்வியறிவு நிரம்பப்பெற்றவளாயும், நற்குண நற்செயல்களுடையவளாயும் தேசத் தொண்டு செய்பவளாயும் இருக்கவேண்டியது அவசியம். கற்ற பெண்கள் ஒவ்வொருவரும் திரிகரணசுத்தியுடன் முயற்சிப்பார்களாயின் பெண்கள் சமுதாயம் விரைவில் முன்னேற்றமடையும். அதனால் ஒவ்வொரு நாடும், தேசமும சீர்பெற்றுச் சிறப்புடன் திகழும்.

இன்றைய உலகில் அந்நியநாட்டு நாகரீகங்கள் அலைமோதி அமோகமாகப் பரவி மக்களிடையே அதிலும் பெண்கள் சமுதாயத்தில அளவிறந்த இடர் உண்டாகின்றன.

வருங்காலப் பெண்கள் சமுதாயம் சீர்பெறவேண்டுமானால் முன்னேற்றமடையவேண்டுமானால்ஒவ்வொரு பெண்மணியும் தன்னாலானவரை பெண்கட்கு உரிய கடமைகளையுணர்ந்து நடப்பதோடமையாது பெண் உலகத்திற்குத் தொண்டு செய்யவும் முற்படவேண்டும். அத்தொண்டாற்றலினால் தங்களையும் சீர்படுத்தித் தங்கள் சகோதரிகளையும் சீர்படுத்திப் பெண்கள் சமுதாயத்தை சமாதானத்துடனும் அறிவுடனும்முன்னேற்றலாம், ஆடவரெத்தொழில் புரியினும் அத்தொழிலில் வெற்றியீட்டவேண்டுமாயின்பெண்கள் துணையின்றிச் சாதித்து வெற்றியீட்ட முடியாதென்பது கற்றோர்க்கன்றி மற்றோர்க்கும் ஒப்பமுடிந்த உண்மையாகும். இதனாலேயே பெண்கட்குத் துணைவியென்ற நாமம்ஏற்பட்டது.

தற்காலப் பெண்கள் சமுதாயத்திடையே நிலவி வரும் ஊழல்களையும் பேதமைகளையும் அகற்றி அவர்கட்கு நல்வாழ்வு, புது வாழ்வு அளிப்பது கற்ற பெண்களின் கடமை. தற்காலத்தில் ஆங்கில நாகரீகத்தில, பண்பாட்டில், மோகங்கொண்ட பெரும்பான்மையான அந்நியக் கல்வி கற்ற பெண்கள் ஆண்களைப்போலவே பெண்கட்கும் சமஉரிமை, உத்தியோகம் கோரி ஆர்ப்பாட்டஞ் செய்கின்றனர். இது பெரும்பிழை. பெண்கள் தங்கட்கு உரிய பண்பாடுகளைக் கற்றுணர்ந்து வள்ளுவர் வகுத்துக்காட்டிய இல்லறமாண்புடையோராய் மிளிர்ந்து ஆடவர்க்கு உறுதுணை புரிந்து அதனால் உலகத் தொண்டர்களாய் விளங்கி தாய்மைப் பொறுப்பை ஏற்று பெண்கள் சமுதாயத்தை முன்னேற்றமடையச் செய்தல் வேண்டும். பண்டைக்கால இலக்கியங்களில்கூறியுள்ள திலகவதியார், காரைக்காலம்மையார் பாண்டிமாதேவியார் முதலியோரின் மாண்பு இன்றைக்கும் நிலவிவருவதுதற்காலப்பெண்கள் கோருவது போல் சமஉரிமை, உத்தியோகம் பார்த்ததினாலா? இல்லை. வாழ்க்கைமுறையில் தலைநின்று தங்கள் தங்கள் உயரிய உரிய ஒழுக்கமுறைகளிலும் இல்லற மாண்பிலும் அற்பமேனும் வழுவாது கற்புக்கடம்பூண்ட பத்தினிப் பெண்டிராய் வாழ்ந்து சமயத்தொண்டாற்றியபடியாலும் இற்றைவரையும் உலகமுள்ளளவும் பெண்கள் சமுதாயத்தின் குலவிளக்குகளாய் எடுத்துக்காட்டாய் நின்று வருகின்றனர். ஆதலால் இக்காலப்பெண்கள் சமய அறிவைப் பெற்று பெருந்தகையோரின் வாழ்க்கை முறைகளையும் பண்புகளையும் தாங்களும் கையாண்டு ஏனைய பெண்களையும் கையாளும்படி செய்வது கற்றபெண்களின் கடமையாகும்.

முன்னிதழ்த்தொடர்ச்சி — [6]

# செந்தமிழ்ச் சிவத்திரு நான் மறைகள்

## ‘இருக்கு’ ‘சாமம்’ ‘வேதங்கள்’ ஆராய்ச்சி

—:o:—

### தமிழ்மறைகள் உண்டென்பதற்குத் தக்க சான்றுகள்

இங்ஙனமே சுந்தரமூர்த்திஅடிகளும் "நானேயும் மடி பாடுத லொழிமேன்" "அன்னே யுன்னையல்லால் இனியாரைநினைக்கேனே" "அண்டாவுன்னை யல்லால் அறிக்கேதத்தமாட்டேனே" "மற்றுத் தேவரை நினைந்துனை மறவேன்" "பேணு தொழிந்தேன் உன்னையல லாற் பிறதேவரை" எனும் அருமைத திருமொழிகளால், தமது சிந்தைஇடை மருது நீரொழுக்குப் போன்று, இறைவன் திருவடியிலேயே நிலைத்து நிற்பதைக் குறிப்பதுடன்

"உளங்குளிர் தமிழூர்"

எனத் தமதுள்ளமே தமிழாற் குளிர்ந்திருப்பதாகவுங் குறிப்பிடுகின்றார். முழுமுதற் சிவத்தையன்றிப் பிற எத்தேவரையும் சிந்தை செய்தறியாத இவர் பல தெய்வவழிபாடு கிரம்

பாட்டுக்களில் வரும் சொற்றொடரால் தமிழுக்குரிய எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், இசையிலக்கணம், நிகண்டு, சோதிடம், சமயநெறி ஆகிய ஆறு மொழிவரையறையேனத் தெளிக. இந்த ஆறங்கங்களும் எல்லாமொழிகளிலுமுள்ள அறிவுநூல்களின் பொதுவிலக்கணமாகுமேயன்றி வடமொழி வேதத்திற்கேயுள்ள சிறப்பிலக்கணமெனச் சொல்லுதற்கில்லை. இவை வடமொழி வேதத்தினுறுப்பாகத்தொகுக்கப்படினும் அதற்காக மட்டும இயற்றப்பட்டன அல்லது பயன்படுத்தப்பட்டன என்று எண்ண இடமில்லை.

இவ்வாறங்கத்தினுள்ளமறநெறியைத்தவிர்த்து ஏனையஐந்தும் மறையன்றி ஏனைய நூல்களை உணர்வதற்கும் ஏனைய செயல்களைச் செய்

........................................

வித்துவான், பண்டிதர், சைவப்புலவர்

### க. வேந்தனர் அவர்கள்

........................................

பிய ஆரிய மறையை எங்ஙனம் பயின்றிருத்தல் கூடும்........? இனி, "வழுக்கி வீழினும் திருப்பெயரல்லால, மற்றுநான் அறியேன்,மறுமாற்றம்' என்று கூறியருளிய சுந்தரமூர்த்திகள் இறைவன் திருப்பெயரை 'சிதம்பரநாதா' 'வேதாரணியா' 'நடராஜா' 'மத்தியார்ச்சுனு' ஜம்புகேச்சுரா' 'பஞ்சநாதா' 'கமலால்யா' 'வைத்தீஸ்வரா' 'விருத்தாசலா' 'கோணுசலா' முதலிய ஆரியப் பெயர்களால் அழைக்கின்றனரோவென்று ஆராயின் இப்பெயர்கள் ஒன்றினையுங் கூருது, திருச்சிற்றம்பலவா, மறைக்காடரே ஐயாறுடைய அடிகளே, இடைமருதா, புள்ளிருக்கும் வேளுரா என்பனவாகிய தமிழ்ப் பேர்களைச் சிறப்பாயெடுத்து நவிலுவதைக் காண்க. இதனல் மூவர் தமிழில் வரும் மறை வேதம் எனும் சொற்கள் ஆரிய வேதங்களைக் குறிக்காதென்பதை யுணர்க.

"நான் மறை யங்கமோதிய நாவலன்." "மாமறை நான்கினோடு அங்கமாறும் வல்லவன்" என்று கூறப் படுதலால் ஆறங்கமுடையது ஆரிய வேதமேயாதலால் ஈண்டு குறிக்கப்பட்டதும் ஆரியவேதமேயெனில் ஆறங்கமென்ற இத்திருப்

யும்பொழுதை அறிவதற்கும் பயன்படுத்தப்படுகின்றன. இதனை "பங்கமில் பதினெட் டொரு நான்குணர்வுமாய் அங்கமாறுஞ் சொன்னலும் ஐயாறுடைஐயனே" என நான்மறையன்றி பதினெட்டு வரலாறுகளையும் உணர்வதற்குத் துணையாக ஆறங்கங்கள் இயற்றப்பட்டதென்னு மூன்மைமைத திருஞானசம்பந்தப்பெருமான் தெரிவிக்கின்றனர். வடமொழியார் கூறும ஆறங்கங்களையும் முறையே தமிழ்மொழியாற் கூறின் இவ்வுண்மை புலனாகும்.

1. சிக்ஷை —ஒலிமுறையியல் என்னும் நூலையும்,
2. கற்பம— மந்திரச்சொற்களைச்செய்யும் வழியையுணர்த்தும் மறைநூலென்னும் நூலையும்,
3. வியாகரணம — எழுத்தியல் சொல்லியல பொருளியலையுணர்த்தும் எழுத்தென்னும் நூலையும்
4. நிருத்தம — மறைப்பொருளையுணர்த்தும நிகண்டு என்னும் நூலையும்,
5. சந்தோவிசிதி— காயத்திரி முதலிய யாப்புகளின பெயர் எழுத்தை விரிக்கும இசை நூலென்னும் நூலையும்.
6. சோதிடம— மறைச் செயல்களைச் செய்யும நேரத்தைக் காட்டும் ஒரு நூலையும் குறித்து நிற்கின்றன.

இங்ஙனம் எல்லாமொழியிலுமுள்ள அறிவுநூல்களின் பொதுவிலக்கணமாக அமைந்த ஆறங்கங்களை

யும் வடமொழி வேதங்களுக்குறுப்பாயிருப்பதொன்றேபற்றி அவற்றை அவ் வடமொழி வேதங்கட்கே உரியனவெனக் கொள்ளல் ஆராய்ச்சிக்குப் பொருந்தாததொன்றாகும்.

"சதாசிவ தத்துவம் முத்தமிழ் வேதம்" "கலலாலந்தன்னிழற் கீழ கலித்துறையதுபயந்த காமர்காட்சி" 'ஒன்றைக் கொஞ்சித் தமிழிற்பகர்வோனே" என்பனவாகிய பல அருள் மொழிகளும், அருமறை ஆதியிற் றமிழில் அருளப்பெற்ற வரலாற்றை அறிவுறுத்தும். இக்கருத்துடன் சைவந் தென்றமிழ்நாட்டிற்றான் முன்னர் தலையெடுத்துப் பின்னர் வடநாட்டிலும் பரவிற்று என்றுப் சரித்திர ஆராய்ச்சியாளர் கருத்தையும "தேவர்முனிவர் தோத்தரித்த" திருவோத்தூரும், வலைவீசி மணம்புரியப்பட்ட மங்கைக்கு "வேதப்பயனெல்லாம திரட்டி மூங்கீர் பொங்கிருஞ்சுவை போலட்டிப் புகட்டிய" பொழுது விற்றிருந்த திருவுத்தரகோசமங்கையும் வேதங்கள் பூசித்த திருவேதகுடியும், திருமறைக் காடும் திருவழுந்தூரும் வேதத்திறப்பொருளருளிய திருவாலவாயும் தமிழ்நாட்டுத் திருப்பதிகளாயிருக்கின்ற உண்மையையும் ஆராய்ந்துணரவல்லார்க்கு செந்தமிழ்ச்சிவத் தென்னாட்டிலேயே முதன் முதல் திருநான்மறைகள் தோன்றிவிளங்கினவெனல் தெள்ளிதிற் புலனாகும்.

* * * [வளரும்]

Commission Sale

விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறைடிஸ்திறிக்கோட்டு பாரபரிப்புத் தத்துவ வழக்கு
இல. 131
பாரபரிப்புத் தத்துவகாரர் — புலோலி தெற்கு, யோசேப்பு எட்வேட் (Joseph Edward)

மேற்குறித்த கோட்டாரின் உத்தரவுப்படியும் குறித்த கோட்டார் எனக்களுப்பிய கொம்மிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ்க் காட்டப்படும் ஆதனம் 1954ஆ புரட்டாதி மாதம் 18ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் குறித்த ஆதனமிடமாக விருந்து ஏலவிபிரசித்த லத்தில் விற்கப்படும்

ஆதன டாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு பண்டத்தரிப்புக் கோவிற்பற்று சிறுவிளானிறை — கன்னர் வளவு அல்லது அத்துவாம்புலம் நிலப்பரப்பு மூன்றும் செய்பயிர் வான்பயிர் பனைகளும் எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு யாழ்ப்பாணம மேற்றிராணியாரின ஆதனம், மேற்கு குழைசப்பிள்ளை ஒல்ரின்பிள்ளை பெண் ரோசம்மாவுக்கும் மறு பேருக்கு முரிய ஆதனம் தெற்கு மார்கிதகைம்பெண அன்னக்குட்டியின் ஆதனம். இடங்களும் தெற்கெல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் வாய்க்காலும் வழியும்

வி. முதலியார் குழந்தைவேலு
கொம்மிஷனர்
பருத்தித்துறை
10—8—54
M 109 20 8

# சிற்றினஞ் சேராது பேரினம் பேணல்

3-ம் பக்கத்தொடர்ச்சி

பெறுதல் உடைத்தென்றறிக.

இவையெல்லாம் வள்ளுவர் கருத்தையே ஒட்டி உரைக்கப்பட்டவைகள். அப்பெரியார் நூலறிவும் நுண்ணறிவும் கொண்டு ஒருவன் மனநலமுடையவனுய் இருத்தல் வேண்டும் என்பதையும் அத்துடன் இனநலனும் உடையவனுய் இருத்தல் வேண்டும் என்பதையும், அவ்வாற்றுல் வரும் நன்மைகள இவை என்பதையும், தீமைகள இவை என்பதையும் தெளிவிதின் விளக்கியதோடமையாது அவர் தமக்கியல்பாயமைந்த ஆசிரியப் பெருந்தகைமையினலே அச்சிற்றினம் சேராமை என்னும் அதிகாரத்தின் இறுதியிலே அவை அனைத்தினும் திரண்ட முடிபுரையாக,

"நல்லினத்தி னூங்குத்
துணையில்லை தீயினத்தி
னல்லற் படுப்பதூஉ மில்".

என்று முடிக்கின்றார்.

அதாவது ஒருவனுக்கு நல்லினத்தின் மிக்க துணையுமில்லை. தீயினத்தின் மிக்க பகையுமில்லை என்பதே. அதனைவிளக்க வந்த பரிமேலழகியார், "நல்லினம் அறியாமையி னீக்கித் துயருறுமற்காத்தலின் அதனைத் துணையென்றும், தீயினம் அறிவினீக்கித் துயருறுத்தலின் அதனைப் பகையென்றும் கூறினர் வள்ளுவர்" என்று கூறுகின்றார் இவ்வாற்றுன் சிற்றினத்தின் தீமையறியப்பட்டது.

முடிபுரை

இக்கட்டுரைப் பொருளின் முடிபுரைக்கண் அறிதற்காவசியமான சில கருத்துக்களை இயைபு பற்றிக் கூறுகின்றாம். ஒருவன் மனம் தூயனுதலோடும், சிற்றினம் சேராமையோடும், பேரின்பத்தைச் சேர்தலோடும் வாழ்தல் வேண்டின், அன்றிப் பெரியாரைப் பிழையாமையையும் காப்பாக்க காதது சூழ்தல்

வேண்டும். பெரியாரைப் பிழையாமையாவது பெரியாராயினுரை அவமதித்தொழுகாமை. இரட்டுற மொழிதல் என்பதனுற் பெரியாராய வேந்தர் மேலும் தவத்தாற் பெரியாராய முனிவர் மேலும் நின்றது.

'எரியாற் சுடப்படினு
முய்வுண்டா முய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்''

இதன் பொருள்: காட்டிடைச் சென்றான் ஒருவன் ஆண்டைத் தீயாற் சுடப்பட்டானுயினும் ஒருவாற்

— சிவதொண்டன் —

ரான் உயிருய்தல் கூடும். தவத்தாற் பெரியாரைப் பிழைத் தொழுகுவார் எவ்வாற்றானும் உயிருய்யார்.

ஆகையால் இவ்வுலகிடை வாழும்ஒருவன் அத்தகைய பெரியாரைப் பிழைத்தொழுகாமையை ஓம்பி வாழ வேண்டும் என்பதும் அறிந்துகொள்க. அப்பால் உமர் சிவஞானபோத நூலின் பனிரண்டாம் சூத்திரத்தில் சொல்லப் பட்டவாறு,

செம்மலர் நோன்றாள்
சேரலொட்டா
அம்மலங் கழீஇ
யன்பரொடு மரீஇ
மாலற நேய
மலிந்தவர் வேடமு
மாலயந் தானு
மரனெனத் தொழுமே''

இதன் பொருள்: (கழலணிந்த சிவன் முத்தனுவான்) செங்கமல மலர்த் போல் விரிந்து விளங்கிய முதல்வனது தோன்றானை அணையவொட்டாது அமர்த்தலைச் செய்விக்கும் அவ்வியல்பினையுடைய மும்மல வழுக்கை ஞான நீராற் கழுவி அகனம் அயரா அன்பு செய்யும் மெய்ஞ்ஞானிகளோடு கலந்துகூடி மலமாக்க நீங்குதலான் அன்பு மிக்குடைய அவரது திருவேடத்தையும், சிவாலயத்தையும் முதல்வனெனவே கண்டு வழிபட்டு வாழும் — (வாழுக) என்பதாம.

L.K.S. LESBAY BROS
GOLD HOUSE

நகைகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னுதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
நகை
வியாபாரிகள்
—o—
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
விலாசம்:
67, கன்னுதிட்டி
யாழ்ப்பாணம்,



## இந்தியச் சால்பில் இலங்கும் 'பாரத இரத்தினம்

திரு. ச. இராசகோபாலாச்சாரியார்

—::—

அரசியலில் அறவியல் கண்ட அறிஞன்

## இந்திய போர்த்துக்கேய உடன்பாடு

கோவா நிலைமை நாளுக்குநாள் பழுதடைந்து வந்து ஒற்றுமையான ஒழுங்கு எதற்கும் இடமில்லை என்று சொல்லத்தக்க நிலைமையை எய்தியிருந்தது. ஆனால் இந்தியாவுடன் உடன்பாடு ஏற்படக்கூடுமென்று போர்த்துக்கேய வெளிநாட்டு மந்திரி இப்பொழுது பத்திரிகை நிருபர்கள் மகாநாடொன்றில் கூறியிருப்பதாக அறியவருகின்றது. போர்த்துக்கேய அரசாங்கத்தாரிடமிருந்து ஒரு நல்லுரை வந்தது இதுவே முதல்முறையாகும்.

## ஒருநொடிப் பொழுதில் கோவாவைக் கைப்பற்றலாம்!

இந்திய அரசாங்கம் ஒரு கொடிப்பொழுதில் கோவாவைக் கைப்பற்ற முடியும். அப்படிச் செய்வதை நான் விரும்பவில்லை என்று இந்திய பத்திரிகைப்பகுதியார் மகாநாடொன்றில் பண்டித நேரு கூறினராம்

## எகிப்தின் உயர்ந்த எண்ணம்

எந்தவிதான பாதுகாப்பு ஒழுங்கிலும் இடம் பெறுதற்கு எகிப்து அரசாங்கம் சம்மதியாதென்று எகிப்து அரசாங்கப் பகுதிச் செய்தியொன்று வெளிவந்திருப்பதாய் அறியவருகின்றது. இந்தியாவையும் ஏனைய ஆசிய நாடுகளையும் எதிரிகளாக்க எகிப்து எவ்வாற்றானும் விரும்பமாட்டாதாம்.

## உயர் நீதிமன்ற வருகை

இந்தமாதம் 23-ந் திகதி தொடக்கம் உயர்நீதி மன்றம் யாழ்ப்பாணத்தில் வழக்குகள் விசாரணை செய்யுமென்றும் உயர்நீதிபதி ஸ்ரீ எம். சி. சன்சோனி அவர்கள் எனவும் அறியவருகின்றது. விசாரிக்க வரும் வழக்குகளுள் மிகக் கூடியவை கொலை வழக்குகளாம்.

## அரசாங்க அறிவித்தல்

வன பரிபாலனப்பகுதி

N 2196— ஒவ்வொரு கூறும் 25 கன அடிகொண்ட 20 கூறுகள் அடங்கிய 500 கனஅடி அழிக்கப்பட்ட அரிந்த மரங்கள் 25-8-54 காலை 10 மணிதொடக்கம் கிளிநொச்சி அரசினர் மரக்காலையில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். அவற்றைப்பார்க்கவிரும்புவோர் டிப்போ கீப்பரின் அனுமதியுடன் பார்வையிடுவதுடன் அவரிடமிருக்கும்விளம்பரத்தின் பிரதான நிபந்தனைகளையும் அறிந்துகொள்ளவேண்டும்.

G 16 20.8

## அணிந்துரை அரங்கம்

மொழிபெயர்ப்புக் கலை

ஆசிரியர்: 'இந்துசாதன' ஆங்கில தமிழ் உதவி ஆசிரியராயிருந்தவரும் அரசாங்க மொழி அலுவலகச் சிரேட்ட தமிழ் மொழிபெயர்ப்பாளருமாகிய திரு அ. க. சுப்பிரமணியம். தனி விநியோக நிலையம்: விவேகானந்தசபைப் புத்தகசாலை 34 மேட்டுத்தெரு கொழும்பு 13.

பிரதி ஒன்று விலை: ரூ 2/—

பண்டு பெருமை பிறங்க வாழ்ந்த தமிழ்மக்கள் இன்றும் அவ்வுன்னத நிலையெய்தி ஒளிபெற்று வாழுதற்கு வேண்டியவை இவை இவையெனப் பாடிப்போந்தார் வரகவி சுப்பிரமணியபாரதியார். அவை ஒவ்வொன்றாய் எமது வாழ்க்கையில் இடம் அமைந்து வருகின்றன. அவற்றுள் ஒன்று "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்" என்பது. அஃதும் நிறைவேறுங்காலம் தொடங்குகின்றது. அத்தொடக்கம் இனிது வளர்தற்கு உதவியாக பாரதியாரின் பொன்மொழிகளையே முகப்பில் எடுத்துக்காட்டி மொழிபெயர்ப்புக்கலை என்னும் இவ் வெளியீட்டைத் தமிழுலகுக்குத் தந்திருக்கின்றார் ஆசிரியர். இது, "காலத்துக்கேற்ற அரிய நூல்" "காலத்தினாற் செய்த பெரு நன்றி" என்பனவாய பல நன்னுரைகளைத் தமிழ்ப் பெருமக்களிடம் பெற்று விளங்குகின்றது. அன்னார் யாவரும் கருதுவதுபோல் இத்துறையில் ஈடுபடும் அறிஞர் யாவரும் இதை ஆர்வத்துடன் வரவேற்பரென்பது சொல்லாமலேயமையும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

ஊர்காவற்றுறை நீதிமன்றக் கோட்டில் சரவணை குழந்தை தம்பி செல்லப்பாபிள்ளை வழக்காளி,

இல. 7295

எதிராக

சரவணை யகோ சந்தியா சைம் பெண் யக்கோவான் — எதிராளி.

ஊர்காவற்றுறை நீதிமன்றக் கோட்டின் 7295ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்தகோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1954 ஆம் புரட்டாதி மீ 14உ செவ்வாய்க் கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபா 287/50ம் ரூபா 250 க்கு 11-12-53 தொடக்கம் 12 2 54 வரை 12 வீதமான வட்டியும் அதன் மேல் முழுத்தொகைக்கும் இறக்கும்வரை 5 வீதமான வட்டியும்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோவிற்பற்று சரவணையிலுள்ள "குரியபற்றையும் குரியவத்தையும்" மேற்குப்பக்கமாக தெ பாபத்தையும் (10½ லீ) கிணறும் பனைகளும் எல்லை கிழக்கு சவிரிமகன் ஞானப்பிரகாசியினுதனம் வடக்கு தொம்மை குசையினுதனம், மேற்கு வேலுப்பிள்ளை பெண் சிவனம்மாவினுதனம். தெற்கு நீக்கிலான கைபெண் மசேவியாளினுதனம். இதடங்கலும். ஆனால் கிணற்றில் பிறபங்காளருக்குரிய தண்ணீர்பங்கும் அர்வை வழிவாய்க்காற்பாவிப்புரித்தும் பிறநீங்கலாக

1954ம் ஆடி மீ 11 ம் உ

வை, ஏர்ப்பமூர்த்தி
கொமிஷனர்.

M. 78 20, 27—8—54.

## திருக்குறள் தேவாரப் பொருளொற்றுமை

2-ம் பக்கத்தொடர்ச்சி

தென்று சிறப்பித்துச் சொல்லப்படுவன அகர முதல் னகர ஈறாகக் கிடந்த முப்பதென்று சொல்லுவர் ஆசிரியர்"

"மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்
தனிமெய்களினது நடப்பு
அகரத்தொடு பொருந்தி
நடக்கும் என்றவாறு"

(தொல்காப்பியம்)

"இங்ஙனம் மெய்க் கண் அகரங்கலந்து நிற்குமாறு கூறினாற்போல பதினோருயிர்க்கண்ணும் அகரம் கலந்து நிற்குமென்பது ஆசிரியர் கூறாராயினார்; அந்நிலைமை தமக்கே புலப்படுதலாலும் பிறர்க்கு இவ்வாறு உணர்தல் அரிதாகலாலுமென்று உணர்க".

"இறைவன் இயங்குதிணைக்கண்ணும் நிலைத்திணைக்கண்ணும் பிறவற்றின் கண்ணும் அவற்றின் தன்மையாய் நிற்குமாறு எல்லார்க்கும் ஒப்ப முடிந்தாற்போல அகரமும் உயிர்க்கண்ணும் தனிமெய்க்கண்ணும் கலந்து அவற்றின் தன்மையாயே நிற்குமென்பது சான்றோர்க்கெல்லாம் ஒப்ப முடிந்தது. 'அகர முதல' என்னுங் குறளால் 'அகரமாகிய முதலையுடைத்து எழுத்துக்களெல்லாம்' அதுபோல இறைவனாகிய முதலையுடைத்து உலகமென, வள்ளுவர் உவமை கூறியவாற்றானும், கண்ணன் எழுத்துக்களில் அகரமாகின்றேன் யானேயெனக் கூறியவாற்றானும் பிறநூல்களானுமுணர்க" (நச்சினார்க்கினியம்) கீதையில் (அக்ஷராணும் ஆகாரவத்) என்று கூறியுள்ளார்.

உயிர்க்குயிராய் இறைவன் இருப்பதை "உரைச்சேரும் எண்பத்து நான்குநூறாயிரமாம்யோனிபேதம் —நிரைச்சேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய் அங்கங்கே நின்றான் கோயில்" என்று சம்பந்தர் அருளிச் செய்தள்ளார்,

"அகாவுயிர்போல்
அறிவாகியெங்கும்;
நிகரில் இறைநிற்கும்
நிறைந்து"

என்றது "திருவருட்பயன்"

"அகர முதலானை
அணியாப்ப னூரானை"

என்றார் சம்பந்தர்.

"அகர முதலின் எழுத்தாகி
நின்றாய்"

என்றார் சுந்தரர்.

"பொறிவாயில் ஐந்தவித்தான்
பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ்வார்"

"மெய்வாய் கண் மூக்குச் செவியென்னும் பொறிகளை வழியாகவுடைய ஐந்தவாவினையும் அறுத்தானது, மெய்யான ஒழுக்க நெறியின்கண் வழுவாது நின்றார்' பிறப்பின்றி எக்காலத்தும் ஒருதன்மையராய் வாழ்வார்."

## உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

### இவ்வாரப் பலன்கள் 22—8—54 —— 28—8—54

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

இந்தவாரம் தொடர்ந்து தொந்தரவுள்ளதாகவே யிருக்கும். வரவு செலவு சமாளிப்பதில் வருந்துவீர் நண்பர்களின் வாக்குறுதிகளில் அதிகம் நம்பியிருக்க வேண்டாம் பலவித இடைஞ்சல்களுக்குள்ளாவீர்

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

உம்முடைய சொந்தக் காரியங்களுக்கும் உத்தியோக காரியங்களுக்கும் இந்தவாரம் மிகவும் நல்லது பல முயற்சிகள் சித்தியாகும். ஆனால் சில கண்டனங்களையும் இடைஞ்சல்களையும் நீர் எதிர்க்க வேண்டிவரும்

**மிதுனராசி** மிருகசீரிடம், 3,4 திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.

இந்தவாரம் சண்டைகளையும் கண்டனங்களையும் தவிர்க்க முயல்வதில் வருந்துவீர். மனச் சமாதானம் இராது. நண்பர் அதிக உதவியாயிருப்பர். வாரஇறுதி தனலாபம் நிச்சயம்.

**கடகராசி** புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.

உம்முடைய காரியங்களில் நீர் அதிக மறைமுகமான எதிர்ப்புக்களை எதிர்பார்க்க வேண்டி வரும். ஆனால் நீர் அவைகளை வெல்லக்கூடியதாயிருக்கும். சிறிது காலத்துக்குத் தேகசுகம் விசேட கவனமெடுக்கவேண்டும். வாக்குவாதங்களைத் தவிர்க்கவும்.

**சிங்கராசி** மகம், பூரம், உத்தரம், 1ம் பாதம்.

உம்முடைய குடும்ப காரியங்களில் அதிக திருத்தமிருக்கும். தனலாபம் நிச்சயம். ஆனால் செலவும் அதிகரிக்கும் சுபசெய்கை நல்ல இலாபத்தைத் தரும். வாரஇறுதியில் பிள்ளைகளுக்குச் சுகவீனமுண்டாகக்கூடும்.

**கன்னிராசி** உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

இது ஒரு தனப்பமான வாரமாயிருக்கும் நீர் சித்திபெறுதற்கு மிக முயலுதல் வேண்டும். தீவிரமாய் முயன்றும் தகுதியான பெறுபேறடைய முடியாதிருப்பீர்.

**துலாமசித்திரை** 3,4ம் பாதம். சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்

சமத்தொழில்கள் நல்ல பயனைத் தரும். காணிகள் மூலம் இலாபங்களுக்கிடமுண்டு உம்முடைய முயற்சிகளில் உம்முடைய பிதாவழி இனத்தவர் அதிக உதவி செய்வர். சலனப்பட்டுக்கொண்டு நிலையாமல் விரைந்து தீர்மானங்கள் செய்யவும் நீர் சித்தியெய்துதல் நிச்சயமாகும். முதலிரு நாட்களும் கவனமாய்க் கழிக்கவேண்டும்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அனுஷம், கேட்டை.

இந்தவாரம் நீர் கந்தோரில் தொந்தரவுகளுக்குள்ளாதல் நிச்சயம். திங்கள், செவ்வாயும் புதன் காலையும் எல்லாவற்றிலும் பிழையானவை இனத்தவர்களுடன் தொந்தரவுகளுக்கிடமுண்டு.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1 பாதம்.

இந்தவாரம் உமக்கு அமைதியின்மையை அதிகமாக உண்டாக்குவதாயிருக்கின்றது. தேசகவீனங்களும் வசைமொழிகளும் உம்மை அதிகம் நிலைகுலைக்கக்கூடும். புதன் பிற்பகல் வியாழன் வெள்ளி கவனமாய்க் கழிக்கவும். வார இறுதி தனலாபங்களைத் தரும்.

**மகராசி** உத்தராடம் 2,3,4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

கந்தோரிலும் வீட்டிலும் சில தொந்தரவுகளிருக்கும். ஒன்றையும் புதிதாய்த் தொடங்க வேண்டாம். சில காரியங்களில் நண்பர் உமக்கு நம்பிக்கைத்துரோகம் செய்யக்கூடும். வார இறுதி கவனமாய்க் கழிக்கவேண்டும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.

பழைய கடுகளை நல்ல பலனைத் தரும். பிள்ளைகள் மூலம் சந்தோஷமும் காணிகள்மூலம் இலாபமும் நிச்சயம். வார இறுதியில் நண்பருடன் வாக்குவாதத்தைத் தவிர்க்கவும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

இந்தவாரம் குடும்பத் தொந்தரவுகள் உண்டாகக் கூடும். வாழ்க்கைத் துணைவருக்கும் பிள்ளைகளுக்கும் சுகவீனத்துக் கிடமுண்டு. உம்முடைய வேலை முறைகளில் சில மாற்றங்களுக்கிடமுண்டு.

# திருமுருகாற்றுப்படை இலக்கிய நயம்

( 1 ம் பக்கத் தொடர்ச்சி )

ஒ—நீக்கம், இமைத்தல் — ஒளி காலுதல்.

ஓவற இமைக்கும் என்ற தொடருக்குச் சேண் விளங்கு அவிர் ஒளி என்ற தொடருக்கும் நச்சினார்க்கினியர் தரும் பொருள் வலிந்து பெறப்பட்டது போலத் தெரிகிறது. நேர்பொருள் கொள்ளத்தக்கது

இங்கு கடலிற்றோன்றும் கதிரவன் அவிரொளியாக விளங்கும் முருகனுக்கு உவமை.

எதிர்ந்தவனின் அகக்கண்முன்னர் உள்ளத்தைக் கவரும் ஒரு காட்சியை நிறுத்துகின்றார் முதலில் கவிஞர். நிறுத்தி அக்காட்சியை முருகன் உருவப் பொலிவோடு தொடர்புபடுத்திவிடுகின்றார். எதிர்ந்தவன் முருகனை கடலிற்றோன்றும் ஞாயிற்றின் பொலிவோடு காணுகின்றான். இந்த முறையிலே எதிர்ப்பட்டவனுடைய உயிருணர்ச்சி முழுவதையும் தமதாக்கிக் கொண்டார் கவிஞர் என்று கூறலாம். இது எதிர்ப்பட்டவனுடைய உள்ளத்தைக் கவர்வதற்கு புலவன் செய்த தந்திரம் என்று நினைத்துவிடக்கூடாது; இந்த உவமை உண்மையான ஆழ்ந்தகன்று செல்லும் பொருளமைதியை உடையது.

நச்சினார்க்கினியர் தொழிலும் வண்ணமும்பற்றி வந்த உவமை என்று குறித்து ஞாயிறு இருளை கெடுக்குமாறு போலத் தன்னை மனத்தால் நோககுவார்க்கு மாயையைக் கெடுத்தலின் தொழிலுவமமும் தன்னைக் கட்புலனால் நோக்குவார்க்கு கடலிற் பசுமையும் ஞாயிற்றின் செம்மையும்போல் மயிலிற் பசுமையும் திருமேனிச் செம்மையும் தோன்றலின் வண்ண உவமமும் கொள்ளக்கிடந்தமை காண்க என விளக்கமும் எழுதினர்.

முருகனின் கருணையையும்தோற்றப்பொலிவையும் உவமை எவ்வாறு புலப்படுத்துகின்றது என அவர் காட்டியுள்ளார். இவ்வுவமை இன்னும் விரிந்து செல்லும் பான்மையுடையது.

சூரியன் உளன் ஆனபடியினால் உலகம் உள்ளது அதேபோல் முருகன் உளன்; ஆனபடியால் நாங்கள் உளம். இவ்வாறும் உவமை குறிப்பாக உணர்த்துகின்றதென்பதெனது கருத்தாகும்.

சொற்களுக்கு அகப்படாத கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் புலப்படுத்தவே புலவர்கள் உவமைகளை வழங்குவர். உலகமுவப்ப வலனேர்பு திரிதரு பலர் புகழ்ஞாயிறு கடலில் தோன்றும் காட்சி ஒருவனுக்கு எத்தனை உணர்ச்சிகளையும் எத்தனை கருத்துக்களையும் புலப்படுத்தும் தன்மை வாய்ந்தது. அக்கருத்துக்களும் அவ்வுணர்ச்சிகளும் ஒருவனுடைய புத்திகூர்மைக்கும் வாழ்க்கை அனுபவத்துக்கும் ஏற்ப எழுவன. அவைக்கெல்லாம் வரையறை வகுப்பது மிகையாகும்.

தூரத்திலே விளங்கும் ஒளிப்பிழம்பாகக் காட்டிய பின்னர், முருகனைக் கிட்டுதலாகக் கொண்டுவருகின்றார் புலவர். கொண்டுவந்து அவனுடைய குணரூப சௌந்தர்யங்களை நுணுக்கமாகக் காட்டுகின்றார்.

* * * [வளரும்]

## வருடாந்த விளையாட்டுப் போட்டி

———

அளவெட்டி சதானந்த வித்தியாசாலை விளையாட்டு மைதானத்தில் 11-8-54புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் பாடசாலைக்கீதம் மாணவர் பாடகொடிகள் ஏற்றப்பட்டு மன்றங்களின் விளையாட்டுப் போட்டி ஆரம்பமாயது. இராமநாதன்மன்றம், நாகலிங்கம் மன்றம், நாவலர் மன்றம் ஆகிய மூன்று மன்ற மாணவ மாணவிகளால் முறையே சாப்பந்தாட்டம், வலைப் பந்தாட்டம் என்பன விளையாடப்பட்டன. வலைப் பந்தாட்டத்திலும், சாப் பந்தாட்டத்திலும் இராமநாதன் மன்றமே முதலிடத்தைப் பெற்றது.

சுற்றில் தலைமையாசிரியர் திரு. அ. பொன்னுத்துரை அவர்கள் இப் பாடசாலையின் வளர்ச்சி நிலையைக் குறிப்பிட்டுப் பேசினர்.

வெற்றிபெற்ற மன்றங்களுக்கு மத்தியஸ்தர்களால் பரிசுக்கிண்ணங்கள் வழங்கப்பட்டு பாடசாலைத் தலைமை ஆசிரியரால் நன்றி கூறப்பட்டது. தேசியகீதத்துடன் விளையாட்டுப்போட்டி இனிது நிறைவேறியது.


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

134,3670

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாசுவமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். மூதலையும் பாசம் பாசமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை எம்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை

சிறுப்பர்.

Std. 14 20-11-48—20-11-49.


## பெயர் மாற்றம்

—0—

காரவெட்டி கிழக்கிலிருக்கும் கணபதிப்பிள்ளை கைம்பெண் சின்னம்மா ஆகிய நான் அறிவிப்பது இன்றுவரையில் என்னுடைய மகளின் பெயர் கணபதிப்பிள்ளை சின்னாச்சி என்று வழங்கப்படுகிறது.

இன்று தொடக்கம் மேற்கூறிய பெயரை மாற்றி கணபதிப்பிள்ளை பேரின்பநாயகி என வழங்கப்படும்.

க. சின்னம்மா

விலாசம்:
க. சின்னம்மா
இறமாத்தோட்டம்
காரவெட்டி கிழக்கு
காரவெட்டி.

M 11 20 8

## காசநோயாளர் சங்க வேண்டுகோள்

காங்கேசன்துறை அரசினர் வைத்தியசாலையிலுள்ள காசநோயாளர்க்கெனப் புதிய இடமொன்று கூடுதலாகத் திறக்கப்பட்டிருக்கிறது. முன்பு இங்கேயிருந்த காசநோயாளர் 162 பேர்; இப்போது மேலதிகமாக 30 பேர் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். குறித்த நோயாளர் வருடக் கணக்காக வைத்தியசாலையிலேயே வாழவேண்டியவர்களாக இருக்கிறார்கள், இவர்களுக்கு கல், வாசகசாலை, நாவகிலேயம், வானொலி வசதி என்பன காசநோயாளர் சங்கத்தால ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

வருடந்தோறும் சமயப் பெருநாட்களைக் கொண்டாடுவதும், வறிய நோயாளிகளுக்கு உதவியளிப்பதும் சங்கத்தின் பிரதான நோக்கங்களாகும். இவற்றிற்கெல்லாம் வெளியிலுள்ள தர்மசீலர்களின் உதவி தேவைப்படுகிறது. வானொலி பழுதடைந்த நிலையில் இருக்கிறது. நோயாளரின் மனவமைதிக்கு இது ஓர் முக்கிய பொருளாகும். இதுவரை சேர்த்தபணம் புதிய வானொலி வாங்கப் போதாது. ஆகவே இயன்ற பணவுதவி புரியுமாறு காங்கேசன்துறை அரசினர் வைத்தியசாலைக்காசநோயாளர் சங்கக் காரியதரிசி வேண்டுகின்றார்.

## கந்தபுராண படனம்

———

சைவ பரிபாலன சபை நாவலர் மண்டபத்தில் 15-8-54ல் கந்தபுராணபடனம் நிறைவு செய்யப்பெற்றது. அன்று வள்ளியம்மை திருமணப்படலத்துக்கு விசேட ஆராதனையுடன் விரிவுரைகள் நிகழ்த்தப்பெற்றன. இந்நிகழ்ச்சிகளிற் பல அறிஞர்பங்குபற்றினர். பல அன்பாளர்கள் குழுமிப்பூர்த்தியாகும்வரையில இருந்து கேட்டு இன்புற்றனர்.

———

## அரசாங்க விளம்பரம்

கிருஷிகப் பகுதி

N. 2198499 — குண்டசாலையிலும் வினிதொச்சியிலுமுள்ள ஆண்கள் கிருஷிபாடசாலைகளில் கமக்காரப்பிள்ளைகளின் ஒருவருடப்பயிற்சி. பயிற்சிபெறவிரும்பும் வடமாகாண மாணவர்கள் விண்ணப்பங்களை 10.9.54 ற்கு முன் யாழ்ப்பாணம் கிருஷிக உத்தியோகத்தருக்கு அனுப்புதல்வேண்டும் விண்ணப்பப்பத்திரங்களை அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் வயது: 1-10-54ல் 17ற்கு மேலும், 21ற்கு உள்ளும தராதரம்: 8ம் வகுப்பு.

G 17 20-8

———

## அரசாங்க அறிவித்தல்

வனபரிபாலனப் பகுதி

N 2210—24092.3 கன அடி அடங்கிய 2642 பாலை, முதிரை காட்டாமணக்கு மரங்கள் விற்பனவிற்கு பாந்தன் அரசினர் மரக்காலையில் இருக்கின்றன. விற்பனையின் விபரம்: பாலை ஒரு கன அடி ரூபா 1.25; முதிரை, காட்டாமணக்கு ஒரு கன அடி ரூபா 2.50 முழு விபரங்கட்கு பாந்தன் டிப்போ கிப்பருக்காவது அல்லது வடபகுதி வனபரிபாலன அதிகாரிக்காவது மனுச்செய்க.

G 19 20-8


## பிரகடனம்

திருவாதவூரடிகள்புராணம் உரையாசிரியர் : ம. க. வேற்பிள்ளையவர்கள் செய்த பொழிப்புரையுடன் விலை ரூபா 2-00.

☞ செந்தமிழ் மொழிவளம் : எங்கள் தமிழ்மொழியைப் பிழையறப் பேசவும் எழுதவும்பயிற்றுவது; தமிழ்ஆங்கில ஆரம்ப மாணவர் தொடக்கம் S. S C. மாணவர் தமக்கும் இன்றியமையாதது; பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை புதிய முறையில் இயற்றியது. விலை: 1—60 சதம்.

பிரதோஷவிரதமான்மியம் (புதியபதிப்பு) சிவவிரதங்களுட் சிறந்ததாகிய இவ்விரத காலத்திற் சுவாமி கும்பிடவேண்டிய ஒழுங்கு, இதனை அநுட்டிக்கவேண்டிய முறை, புத்திபூர்வமாகவும் அபுத்திபூர்வமாகவும் அநுட்டித்தோர் பெற்றபேறு முதலியவற்றை இனிய தமிழ் வசன நடையில் விளக்குவது; விலை சதம் 40.

சிவராத்திரி விரத மான்மியம் (வசனம்) விலை சதம் 25.

அரிச்சந்திரபுராணம்-மயானகாண்டம் பண்டிதர் ம வே தி ச. எழுதிய பொழிப்புரை இலக்கணக்குறிப்பு. நூலாசிரியர்வரலாறு முதலியவற்றுடன் உயர்தர வகுப்புக்களுக்குச் செய்யுட்பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது. [இலங்கை அரசினர் பாடபுத்தக பரிசீலனைச் சபையாரின் அங்கீகாரம் பெற்றது.] விலை சதம் 75.

மாணிக்கவாசகசுவாமிகள் சரித்திரம் திருவாசகத்திரட்டுடன்: மேற்படி பண்டிதர்எழுதியது; கொழும்பு விவேகானந்தசபையார் நடத்தும் சைவசமயபாடப்பரீட்சை மேற்பிரிவிற்குப் பாடமாக விதிக்கப்பட்டது விலை ரூ 1—25 ச.

உலகம்பலவிதக்கதை 1. (கோபாலநேசரத்தினம்) ஷைபண்டிதர் எழுதியது. படிக்கப்படிக்கத்தெவிட்டாதது. விலை ரூ. 1—25ச

ஈழமண்டலசதகம்: ஆசிரியர் ம. க. வேற்பிள்ளை இயற்றியது இலங்கையின் மான்மியத்தை எடுத்துவிளக்குவது; விரிவுரையுடன் விலை ரூ 1·00

சைவசமயசாரம்: ஆசிரியர் சு. சிவபாதசுந்தரம்(B.A.) அவர்கள் எழுதியது. கொழும்பு விவேகானந்தசபையார் நடத்தும் சைவசமயப் பரீட்சைப் பாடங்களுளொன்றாயுள்ளது. விலை ச 45

"ஆறுமுகநாவலர்" (ஆங்கிலத்தில்) சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் (B. A.) எழுதியது; ஆங்கிலம்படித்தோர் எவரும் படிக்கத்தக்கது முக்தி வெளிவராதது. விலை 60 சதம் (அஞ்சல் 10)

முற்பணமனுப்புவோர்க்குத் தபாற் செலவின்றிப் புத்தகங்கள் அனுப்பப்படும்.

Apply: to PANDIT V. T. SAMBANDHAN Vannarpannai, Jaffna


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

Printed and Puplished by S. P Kandiah, F. I. S. A. Lond) residing at 245; Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarpannai Jaffna on Friday August 20 1954.